IN THE COURT OF THE DISTRICT MUNSIF, TIRUMANGALAM

**DEPOSITION OF WITNESS (P.W. 3)**

Solemnly affirmed and sworn by Tmt.K.Sailaja Grade III Bench clerk on 25.04.2025. in accordance with the provisions of Act XX111.

அசல் வழக்கு எண்– 147/2012

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பூமாரி | தாலுகா | |
| தகப்பனார்/கணவர் பெயர் | | ஊர் | |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

வா.சா.3 முதல் விசாரணை

நான் கரடிக்கல் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்ற அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் கண்ட அ பதிவேட்டின் நகல், சிட்டா, அடங்கல், கிராமபுல வரைபடம், 10(1) சிட்டா ஆகியவைகளை தற்போது கொண்டுவந்துள்ளேன். அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள கிஸ்தி ரசீதுகள் அனைத்தும் தாலுகா அலுவலகத்தில் உள்ள ஆவணப்பிரிவில் உள்ளது. நடப்பு ரசீதுகள் அனைத்தும் எங்கள் அலுவலகத்தில் உள்ளது.

சர்வே எண்.158/10A, 158/4, 158/12A, 158/5A, 158/6A ஆகிய சர்வே எண்களுக்கு உள்ள சொத்துக்களுக்கான அ பதிவேட்டு நகலை ஆவணமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி அனைத்து சர்வே எண்களும் பட்டா எண்.279ல் கட்டுப்பட்டு கருப்பாயி என்பவர் பெயரில் தாக்கலாகியுள்ளது. **(சர்வே எண்.158/10A, 158/4, 158/12A, 158/5A, 158/6A ஆகிய சர்வே**

**எண்களுக்கான அ பதிவேட்டின் உண்மை நகல் சா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

மேற்படி சர்வே எண்களுக்குரிய சிட்டாவை ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**சர்வே எண்.158/10A, 158/4, 158/12A, 158/5A, 158/6A ஆகிய சர்வே எண்களுக்குரிய சிட்டாவின் உண்மை நகல் சா.சா.ஆ. 2 ஆக குறயீடு செய்யப்படுகிறது.**)

மேற்படி சர்வே எண்களுக்குரிய அடங்கல் கணக்கை ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**சர்வே எண்.158/10A, 158/4, 158/12A, 158/5A, 158/6A ஆகிய சர்வே எண்களுக்குரிய 1434 பசலிக்கான அடங்கல் கணக்கு சா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) மேற்படி** அடங்கல் யார் பெயரில் தாக்கலாகியுள்ளது என்றால் சர்வே எண். 158/4 மற்றும் சர்வே எண்.158/5A கருப்பாயி பெயரிலும், சர்வே எண்.158/6A, 158/10A2 மற்றும் 158/12A ரவி என்பவர் பெயரிலும் சர்வே எண்.158/10A1 ராஜேந்திரன் பெயரிலும் தாக்கலாகியுள்ளது. ரவி மற்றும் ராஜேந்திரன் ஆகியோர்கள் கருப்பாயிக்கு என்ன உறவுமுறை என்றால் மகன்களாவார்கள்.

சர்வே எண்.158/4 ல் கருப்பாயி என்ன பயிரிட்டுள்ளார் என்றால் 2024 நவம்பர் முதல் 2025 பிப்ரவரி வரை மிளகாய் மற்றும் தக்காலி பயிரிட்டுள்ளார். சர்வே எண்.158/5A ல் கருப்பாயி என்ன பயிரிட்டுள்ளார் என்றால் 2024 ஜூலை முதல் கூவாப்புல்(மாட்டு தீவணம்) பயிரிட்டுள்ளார். சர்வே எண்.158/6Aல் என்ன பயிரிடப்பட்டுள்ளது என்றால் 2024 ஜூலை முதல் கூவாப்புல்(மாட்டு தீவணம்) பயிரிட்டுள்ளார். சர்வே எண். 158/10A1ல் என்ன பயிரிடப்பட்டுள்ளது என்றால் 2024 நவம்பர் முதல் 2025 பிப்ரவரி வரை வெண்டை பயிரிட்டுள்ளார். 158/10A2ல் என்ன பயிரிடப்பட்டுள்ளது என்றால்

2024 நவம்பர் முதல் 2025 பிப்ரவரி வரை தட்டை பயிர் பயிரிட்டுள்ளார். 158/12Aல் என்ன பயிரிடப்பட்டுள்ளது என்றால் 2024 ஜுலை முதல் அகத்தி பயிரிட்டுள்ளார்.

மேற்படி சொத்துக்களுக்குரிய புல வரைபடத்தை ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**சர்வே எண்.158/10A, 158/4, 158/12A, 158/5A, 158/6A ஆகிய சர்வே எண்களுக்குரிய புல வரைபடம் சா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி சொத்துக்களில் கிணறு உள்ளதா என்றால் சர்வே எண்.158/4 ல் ஆள்துளை கிணறு உள்ளது.

மேற்படி சர்வே எண்.158/4 மற்றும் 158/5Aவிறகுரிய கணினி சிட்டாவை ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**23.04.2025ம் தேதியிட்ட கணினி சிட்டா சா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மற்ற சர்வே எண்களுக்கு கணினி சிட்டா ஏற்படவில்லை.

என்னிடம் காட்டப்படும் கிஸ்தி ரசீது நான் வழங்கியதுதான் என்றால் சரிதான். (**மேற்படி ஆவணம் வாதி தரப்பில் இருந்த ஆவணத்தை காட்டி கேட்கப்பட்டது. 02.04.2025ம் தேதியிட்ட கிஸ்தி ரசீது சா.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி ஆவணங்கள் அனைத்தும் நடப்பில் உள்ளது என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி வா.சா.3 குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)